14.11.2022 அ.வ.எண். 53/2021 வா.சா.1 - ராஜகுரு

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எனது அப்பாவும், 1ம் பிரதிவாதி தகப்பனாரும் உடன் பிறந்தவர்கள். நான் 10வது வரை படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியும். தாவா சொத்தின் சர்வே எண். 238-18 ஆகும். என்னிடம் காட்டப்படும் நத்தம் அடங்கலில் மேற்படி சர்வே எண் 1ம் பிரதிவாதியின் தந்தை கணேசன் பெயரில் உள்ளது, அதன் உண்மை நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். தாவா சொத்துக்கு எனது அப்பா பெயரில் வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் முன்பு கூரை வீடு இருந்தது என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய தாயார் லீலாவதிக்கு முன்பு தாவா சொத்தில் உள்ள மின்இணைப்பு 1ம் பிரதிவாதியின் தந்தை கணேசன் பெயரில் இருந்தது. என்னிடம் காட்டப்படும் மின்இணைப்பு ரசீதுகள் 1ம் பிரதிவாதியின் அப்பா பெயரில் உள்ளது அந்த மின் இணைப்பு இரசீதுகள் (எண்ணிக்கை - 59) பி.வா.சா.ஆ.2 ஆகும். கணேசன் பெயரிலிருந்து லீலாவதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்து கொடுத்த மனு நகல் அலுவலகத்தில் உள்ளது. தாவா சொத்தின் கதவு எண். 1-206. தாவா சொத்துக்கு அதே கதவு எண்ணில் 06.10.2000ம் தேதியில் வீட்டு வரி ரசீது கணேசன் பெயரில் ஏற்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கணேசனை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. கணேசன் பெயரில் இருந்து தான் லீலாவதி பெயருக்கு மின்இணைப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தற்போது தாவா சொத்தில் உள்ள மின்இணைப்பு யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. 21.04.1974ல் தாவா சொத்தில் உள்ள கட்டிடத்திற்கு கணேசன் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்று தகவல் உரிமை சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. கணேசன் பெயரில் மின்இணைப்பு உள்ள விபரத்தை பிராதில் சொல்லவில்லை. எனது பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்யவேண்டி 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினர் வருவாய் கோட்டாட்சியரிடம் வழக்கு போட்டிருந்தார்கள். அந்த வழக்கு விபரத்தையும் பிராதில் சொல்லவில்லை. இந்த வழக்கு போட்ட பிறகு தான் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து எனக்கு நோட்டீஸ் வந்தது. தாவா சொத்திற்கு ஆதியிலிருந்து 1ம்

பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் பட்டா உள்ளது என்றும், அதை மறைத்து மோசடியாக அசைன்மெண்ட் பட்டா பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி செல்வகுமார் ஊரில் வசித்து வருகிறார். 5 வருடமாகத்தான் வசித்து வருகிறார். 1ம் பிரதிவாதியின் பூர்வீக ஊர் கட்டானிபட்டி. 1ம் பிரதிவாதி தொழில் நிமித்தமாக வெளியூரில் இருந்ததாகவும், அண்ணன் என்ற முறையில் தாவா சொத்தை எனது அப்பாவிடம் ஒப்படைத்ததாலும் அதை தவறாக பயன்படுத்தி மோசடியாக அசைன்மெண்ட் பெற்றோம் என்று சொன்னால் சரியல்ல. கணேசன் பெயரிலிருந்த மின்இணைப்பை மோசடியாக எனது அம்மா பெயருக்கு பெயர் மாற்றம் செய்ததை தெரிந்து மீண்டும் 1ம் பிரதிவாதி தகப்பனார் பெயரில் மின்இணைப்பு கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினர் தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தில் ஆண்டுஅனுபவித்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்தில் எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கில் தோதிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றும் அவைகள் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாவா சொத்தை அபகரிக்க முயற்சி செய்வதாக எங்கள் மீது கணேசன் குடும்பத்தினர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. கணேசன் என்பவரை வழக்கில் சேர்த்தால் உண்மைத்தன்மை தெரியவரும் என்பதால் அவரை திட்டமிட்டு சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.